1404
15.

உ

சிவமயம்.

வீரசைவம்.

திங்கள் வெளியீடு.

17 SEP 1930

மலர் உ	பிரமோதூத—ஆவணி 1930—ஆகஸ்டு	இதழ் ௮

க. கடவுள் வணக்கம்

உ. ஸ்ரீபசவேச விஜயம்

௩. வருணாச்சிரமப் பிரகாசிகை

௪. தீக்ஷீய மோக்ஷ சாதனம்

௫. திருமுருகாற்றுப்படை

௬. பாவலர் விருந்து

௭. சிவானுபவம்

௮. தமிழ்நாட்டு நிகழ்ச்சிகள்

பத்திராசிரியர்: வீ. குமாரவீரையர்,
வீரசைவ நிலையம்,
முசிறி, (திருச்சி ஜில்லா.)

நித்தியானந்த அச்சுக்கூடம், பெரியகடைவீதி, துறையூர்—1930.

வீரசைவ சித்தாந்த மகா சங்கம்.

சமயாபிமான சீலர்களே!

புண்ணிய பூமியாகிய பாரத நாட்டின் கண் பற்பல பாகங்களில் பற்பல ஜாதியாரும் தத்தம் சமூகத்தையும் சமயத்தையும் முன்னேற்றமடையச்செய்யப் பற்பல அரும்பாடுபட்டுவருகின்றனர். நமது சமூகமும் சமயமும் பண்டைக்காலத்தில் தலைசிறந்து நின்றனவெனினும், இக் காலத்திய நிலையை நோக்கின் நாமே எவ்வகையினும் பின் வாங்கி நிற்கின்றோம். நம்மவரிற் சிலர் உலகானுபவமறியாது சிற்றூரிலிருந்துகொண்டு தம்மைத்தாமே பாராட்டிக் கொண்டிருக்கின்றனர். அவரைத் தற்கால வுலகியலறிந்தார் எவரும் மதியார். மதிப்பென்பது தாம்தாம் தக்க நிலையிலிருப்பப் பிறரால் மதிக்கப் பெறுவது. விரித்துக்கூறின் நமது சமூகமோ கல்வியாலும், செல்வத்தாலும், செல்வாக்கினாலும் பின்னடைந்து நிற்கின்றது எனக்கூறின் அஃது பொய்மையாகாது. சுருங்கக் கூறின் முன்னேற்றத்திற்கு ஒற்றுமையே காரணமாக நிற்கும்.

ஒற்றுமையோ பலரும் பலமுறை ஒருங்கே கூடிக்கலந்துரையாடலால் உண்டாகும். செல்வாக்கில்லாத சமூகமாயினும் ஒற்றுமைப்படின் அது நிகரற்ற பேராற்றலையடையும் என்பதில் ஐயமில்லை. ஆதலின் நமது சமூக சமய முன்னேற்றத்தைக்கருதி நடைபெற்று வரும் நமது மகா சங்கமானது இவ்வாண்டில் கோடை விடுமுறையில் நிலையான ஆலோசனையினால் நடைபெற்றிலது; எனினும், வரும் டிசம்பர் முடிவில் தக்கதோர் முறையில் சிறப்புற நடத்தக் கருதியிருக்கின்றமையால் சங்கத்தின் உறுப்பினர்களும் பொறுப்பாளர்களும் தம்மாலியன்ற பொருளுதவி முதலியன செய்து தத்தம் கடமைகளையாற்ற முன்வருவார்களென இச் சங்கத்தார் வேண்டுகின்றனர். மகா சங்கத்தில் நிறைவேற்றக் கருதும் தீர்மானங்களை முன்னரே நேயர்கள் எழுதியனுப்புவாராயின் ஆலோசனைக் கழகத்தில் முடிவு செய்ய ஏற்றதாகுமென்பதை ஞாபகப்படுத்துகின்றோம்.

இங்ஙனம்,

தலைமைக் காரியதரிசி.

17 SEP 1930
MADRAS

உ
சிவமயம்.

வீரசைவம்.

பிரமபுரம் ஸ்ரீ சிவஞானபாலைய சுவாமிகள் அருளால்
மகாசங்கத்தினின்றும் வரும்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

மலர்	பிரமோதூத—ஆவணி.	இதழ்
உ.	1930—ஆகஸ்டு.	அ.

(கடவுள் வணக்கம்.)

1 *பஞ்சாநந தநுத்பூதாந் பஞ்சாக்ஷர மநூபமாந்*
பஞ்சஸூத்ர க்ருதோவந்தே பஞ்சாசார்யாந் ஜகத்குரூந்.

2 முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே யீசன் மகனே—யொருகை முகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கா லெப்பொழுதும்
நம்பியே கைதொழுவே னான்.

3 வெள்ள வேணிப் பெருந்தகைக்கி யாஞ்செய் யடிமை மெய்யாகக்
கள்ள வேடம் புனைந்திருந்த கள்வ ரெல்லாங் களங்கமறும்
உள்ள மோடு மெய்யடியா ராக வுள்ளத் துள்ளுமருள்
வள்ள லாகும் வசவேசன் மலர்த்தா டலையால் வணங்குவாம்.

4 பங்க வளற்று வழிமாற்றி யொருநல் வழியைப் பகர்வார்போல்
தங்கண் மதியிற் பலபிதற்றுஞ் சமய ருரைக டமைநீக்கி
அங்க நிலையிற் றிலிங்கநிலை யிற்றென் றருளும் வீரசைவ
சிங்க நிலைத்த வருட்சென்ன வசவன் றிருத்தாள் சிரத்தணிவாம்.

5 மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி
இறைவர்தம் பெயரை நாட்டி யிலக்கணஞ் செய்யப் பெற்றே
அறைகடல் வரைப்பிற் பாடை யனைத்தும்வென் றுரி யத்தோடு
உறழ்தரு தமிழ்த்தெய் வத்தை யுண்ணினைந் தேத்தல் செய்வாம்.

ஸ்ரீ பசவேச விஜயம்

திருவாளர், **G. C.** வீரப்பா, B. A., L. L. B., வழக்கறிஞர், பெங்களூர்.

பெண்களின் நிலைமை.

நம் பசவேசராகிய பெருந்தகையார் சீர்திருத்தஞ் செய்யுமளவும் அக்காலத்தில் பெண்களது நிலையோ கவலைகூரத் தக்கதாயிருந்தது. பெண்கள் எவ்வகையிலும் சிறிதுஞ் சுதந்தரமற்றவரா யிருந்தனர். உலகியல் சம்பந்தமான காரியங்களில் பொறுப்பற்றவரா யிருப்பினும் ஆத்ம விளக்கத்திற்குக் காரணமான நூலியல் சம்பந்தமான வைதிக கிரியைகளிலும் சுதந்தரமற்றவரா யிருந்தனர். ஆண் மக்களுக்குப் பிறந்ததுமுதல் நாமகரணம், அன்னப்பிராசனம், சௌளம் முதலிய கருமங்களைச் செய்துவந்தனர். பெண்மக்களோ அக்கருமங்கட்கும் உரியவரல்லர் எனக்கருதி அவற்றுள் ஒன்றேனும் செய்யாது விடுத்து வந்தனர். மாசில்லாத உயர்ந்த மரபினராகிய தாய் தந்தையர்கட்குப் பிறந்த உயர்குடிப் பிறப்பாளராகிய ஆண் பெண் பாலராகிய மக்களுள் ஆண்மகனே கல்வி கற்றற் குரியவன்; வேதாகம நூல்களை ஓதுதற் கருகன்; வைதிக கிரியைகளைச் செய்தற்குப் பாத்திரன், மந்திர உபதேசம்பெற்றுக் கடவுட்பூசை முதலியனசெய்து முத்தியை அடைதற்குச் சுதந்தரன் எனக்கருதி இயற்கையிலமையாத பிராமணத்துவத்தை உபநயன முதலிய சமஸ்காரத்தாற்கொடுத்து தூய்மையனாக்கி வந்தனர். பெண்மகளுக்கோ உபநயன முதலியவற்றால் பிராம்மணத்துவத்தைக் கொடாது இழிந்த நிலைமையிலேயே வைத்திருந்தனர். அறவோர்க் களித்தல், அந்தண ரோம்பல், துறவோர்க் கெதிர்தல், விருந்து புரந்தருதல் முதலிய இல்லறத்தை நடத்துதற்கு ஈருடல் ஒருயிராய் நிற்கும் காதலன் காதலிகளாகிய இருவருமன்றோ உரியர்! அங்ஙனமிருந்தும் ஆண்மகனை மாத்திரம் உபநயண முதலியவற்றால் பிராம்மணனாக்கிப் பெண்மகளை மாத்திரம் அதனை யிழந்து நிற்கச்செய்தல் அறமாமா? வேள்வி முதலிய வைதிகக் கிரியைகள் செய்யுங்கால் காதலன் காதலிகள் இருவரும் கங்கணங் கட்டிக்கொள்ளவில்லையா? அவ்விருவருள் ஒருவர் பிராமணத்துவத்தைப் பெற்றும், ஒருவர் பெறாமலுமிருந்தால் அவர் செய்யும் வேள்வி முதலியன வைதிகக்

கிரியைகளாகுமா? ஓர் வைதிகக் கிரியையைத் தூய்மை யுடையோ ரும் அஃதில்லாதோருமாகிய இருவர்கூடிச் செய்யலாமா? அல்லது பிராமணனும் பிராமணரல்லாத பெண்ணுங் கூடிச் செய்யலாமா? ஓர் மாது கருவுற் றிருக்கும்போது அக்கருவினுள் ளிருக்கும் சிசுவின் வளர்ச்சியைக் கருதிச் சீமந்த முதலிய வைதிகக் கிரியைகள் செய்யப் படவில்லையா? அக்கிரியை ஆண் என்றும் பெண் என்றும் அறியாத நிலைமையில் பொதுமையில்தானே செய்யப்படுகிறது. பிண்டோற் பத்தி முதல் பொதுவாகச் செய்யப்படும் கிரியைகளுள் சிலவற்றை மாத்திரம் பிறந்த பின்னர் பெண்ணென் றறிந்த மாத்திரத்தில் செய் யாது விடுவது யாது கருதியோ? உலக விருத்திக்கு இருவேறு வடி வாகப் படைக்கப்பட்ட உடல்நிலையில் ஆண் பெண்ணெனக் காணப்படி னும் அதனுள் விளங்கும் ஆத்மநிலையும் வேறுபடுமா? ஆத்மநிலையை ஒன்றெனக் கருதுவோர் உடல் வேறுபாடு கருதி சிவபூசை முதலிய சத்கருமங்களிலும் சுதந்திரத்தைக் கொடாது விடுவரா? உடல்நிலை யைக் கருதின் தொழின்முறையில் வேறுபாடு கருதலாம். உயிர்நிலை யைக் கருதின் விவேக விளக்கத்தினும் வேறுபாடு கருதலாமா? உப நயனம் தீக்ஷை முதலிய சமஸ்காரத்தால் பரிசுத்த நிலைமையையடைந்த ஓர் நற்குடிப் பிறப்பாளன் பிறப்பு வசையால் ஒத்து சமஸ்காரத்தால் பரிசுத்தமடையாத பெண்ணை மணந்துகொள்ளலாமா? அப்பெண் ணால் திருத்திவைக்கப்படும் உபகரணத்தைக்கொண்டு சிவபூசை முத லியன செய்யலாமா? அம்மனைவியால் செய்யப்படும் உணவினை நிவே தனஞ்செய்து அருந்தலாமா? அந்நிவேதனத்தை இறைவனும் ஏற் றுக்கொள்வனா? அதனையுண்டு வளரும் உடலும் இறைவர் பணிக் கும் அடியார் பணிக்கும் உரியதாகுமா? பெண்களைக் காமவெறி யைத் தணித்துக்கொள்ளுதற் கேற்ற ஆவுறிஞ்சு தறியாகவும், புதல்வ ரைப் பயந்துகொடுக்கும் விளைநிலமாகவும், அடிசல் செய்யும் யந்திர மாகவும் கருதி நடத்திவரலாமா? இப்படிப்பட்ட தாழ்ந்த முறையில் நடத்தப்படும் பெண்களின் இரக்கமான நிலைமையைக் கண்ட நம் பசவேசர் ஆறுத்துயரம் அடைந்தனர். அடங்காத வெறுப்பைக் கொண்டனர். ஆனால் தம்மால் இயலாதெனவெண்ணி வாளாவிடுத்து விடுவரா? அங்ஙனம் விடுவதுதான் உயர்ந்தோரது கடமையாமா? நமது பசவேசர் கருணையே வடிவமான கண்ணுதற் பெருமானடிய ரல்லவா? ஆண்டவனது திருவுள்ளக் கருத்தை யுணர்ந்து ஆவன

செய்தலன்றோ அடியாரது கடமை! நமது கருணைவள்ளல் யாதொரு செயலுமற்றுத் தனித்தோரிடத்தேயிருந்து உமாபதியாகிய சிவபரஞ் சுடரின் திருவுள்ளக் கருத்தையும், மதத்தாபனுசாரியாருடைய பெரு நோக்கத்தையும் சிந்தித்துத் தம்முயிர்த் துணையாக உள்ளத்தினுள்ளே யிருந்து விளக்குவிக்கும் இறைவன் உணர்த்த வுணர்ந்து அடங்காத மகிழ்ச்சியும் அன்பும் உடையராயினர். சிறிதும் தாமதியாது அடியிற்கண்டவாறு முயற்சிக்கத் தொடங்கினர்.

அமைச்சர் பெருமானாகிய நம் பசவேசர் ஆலோசனை சபை ஒன்று கூட்டுவித்தனர். அக்காலத்திய பெண்களின் நிலையை எடுத்து விளக்கினர். 'பெண்களின் சீர்திருத்தச் சபை' ஒன்றை நிறுவினர். அதன் சார்பில் ஆங்காங்குப் பற்பல பெண் பாடசாலைகளை யேற்படுத்தினர். அப்பாடசாலைகளில் அனுபவத்திலும் அறிவிலுஞ் சிறந்த முதியோரையே உபாத்தியாயராக நியமித்தனர். ஆரம்பக் கல்வியைக் கற்பிக்கும்பொழுதே பெண்களின் கற்பு நிலையையும், குடும்பத்தை நடாத்தும் செட்டான முறையையும், குழந்தைகளைப் பேணும் பாலவயித்திய முறையையும், பதார்த்தகுண தோஷபரிகார முறையையும், சமையல் செய்யும் பாகநூலையும் வகுப்பிற் கேற்றவாறு படிப்படியாகக் கற்பிக்குமாறு திட்டஞ் செய்தனர். பெண்களின் தேகவமைப்பைப் பிறருளம் புகுதாத முறையில் ஆடம்பரமின்றிய ஆடையாற் காக்கும்படி உடையுடுக்கக் கற்பிக்கச் செய்தனர். பெண்கள் நாள்தோறும் செய்யும் நித்திய கருமங்க ளனைத்தும் தேகாரோக்கியத்திற்கும் சமயவளர்ச்சிக்கும் ஏற்றவாறு ஒன்றிற்கொன்று காரண காரிய சம்பந்தமுடையனவாக இருக்கும்படிக் கற்பித்துவரச் செய்தனர். பெண்கள் படிப்பதெல்லாம் உத்தியோக முறையில் வெளியேறிப் பொருளீட்டுவதற் கன்று. தம் கணவரால் தேடிக்கொடுக்கும் பொருளைச் செட்டாக வைத்துக்கொண்டு தம்மையும் தமது கணவன்மாரையும் தம் புதல்வர்களையும் பாதுகாத்துக் கொள்ளுதற் கேற்ற அறிவு வளர்ச்சிக்கும், தத்தம் புதல்வர்களைத் தத்தம் வீட்டிலேயே வைத்து ஆரம்பக் கல்வியைக் கற்றுக்கொடுத்துப் பழக்குவதற்கும், தமது மனையை நோக்கிவரும் விருந்தினர், அறவோர், துறவினர், சங்கமர் முதலான பெரியோர்களுக்கு உண்டி முதலியன அளித்து உபசரித்தற்கும், ஆண் மக்களைப்போலப் பெண் மக்களும்

சிவதீக்ஷையைப் பெற்றுக்கொண்டு சிவபூசை முதலியன செய்யுங் கால் மந்திரலோப மின்றியும் உச்சரிப்பில் வழுவின்றியும் நல்லிசை யுடன் தோத்திர ரூபமான பாடல்களை ஓதுவதற்கும், கணவன் முத லிய பெரியார் சிவபூசை செய்யுங்கால் அவர்க்கு வேண்டும் பொருள் களைச் சித்தஞ்செய்து கொடுத்து பக்திரசமான உருத்திர சமக முத லிய தோத்திரங்களைச் செய்வதற்கும் உதவியாக இருத்தற்கே கல்வி கற்பிக்கப்படுவதென்னும் நோக்கத்தை அடிக்கடி ஞாபகப்படுத்தும் படிச் செய்தனர். அச்சபையின் உறுப்பினர்களை நோக்கி, ஐயன்மீர்! நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் அருந்துணையா யிருந்துதவு வோர் பெண்மணிகளே. அவர்களும் நம்மோடொத்த கல்வியறிவும், தீக்ஷா சமஸ்காரமும் பெற்ற புனிதராயிருந்தா லொழிய அவர்களைத் துணையாகக்கொண்டு செய்யும் இல்லறமோ சிவபூசையோ எதுவும் யாதொரு பயனையும் தராது. தீக்ஷை முதலியவற்றால் புனிதராகாத மனைவிமாரைக்கொண்டு செய்துகொள்ளும் சிவபூசை முதலியன வெல் லாம் அருள் நூலுணர்ந்த அந்தணனொருவன் புன்புலாலுண்ணும் புலையனைத் துணைகொண்டதனோடொக்கும். ஆதலின் அன்பர்களே! நாம் எந்தெந்த வகையில் கடவுளது திருவடியைச் சாரும் வரை பக்குவமுடைய ராகின்றோமோ அதுவரையும் நமது பெண்களையும் பக்குவமுடைய ராக்கவேண்டும். அதற்கு மதக்கொள்கைகள் எல் லாம் தடையாக நிற்கின்றன. அவற்றுள் வீரசைவ மதமே பேதங் கருதாது உதவி புரியும் உயர்ந்த நிலையில் நிற்கின்றது. வீரசைவ மதாசாரியர்களே ஆண்மக்களைப் போலவே பெண்மக்களும் வைதிக கருமங்களனைத்தையும் செய்துகொள்ளுதற்கு உரியரெனவும், பொரு ளீட்டற்குப் புறத்தொழிலைச் செய்ய வெளி யேறாது தம்மகத்தே யிருந்தூ ஓதல், ஓதுவித்தல் சிவசம்பந்தமான தருமங்களைச் செய்தல், செய்வித்தல் முதலிய அனைத்திற்கும் உரியவர்கள் எனவும் கருணை கூர்ந்து அருள் செய்திருக்கின்றனர். வீரசைவ மதமே பிறருதவி யின்றித் தாமே தமது இஷ்டலிங்கப் பூசையைச் செய்துகொண்டு இறைவனருளைப் பெறுதற்குரிய பெருநெறிச் சமயமாக விளங்குகின் றது. ஆதலின், சகோதர சகோதரிகளே! இருபாலாரும் ஒத்த நிலைமையிலிருக்க வேண்டுமானால் வீரசைவ மதத்தை உயர்நெறிச் சமயமாகக்கொள்க! ஸ்ரீகணநாதர்களைக்கொண்டு வேதாகம முறைப் படி சிவதீக்ஷா சமஸ்காரத்தைப் பெறுக! சமஸ்கார முறைப்படி

ஆண் பெண்பால ரனைவரும் பால விருத்தர்வரை யாவரும் ஒழியாது இலிங்கதாரணம் செய்துகொள்க! செய்துகொண்ட பின்னர் அரைக் கணமும் உள்ளும் புறமும் அகலாது தரித்துக்கொண்டே எவ்வித பணியையும் செய்க! தாரணஞ் செய்துகொள்ளாதவர் எவராயினும் அவருடனிருந்து உண்ணற்க! அவர்செய்த எவ்வித உணவையும் ஏற்றுக்கொள்ளற்க! உயிர்க் கிறுதிவரினும உயிர்த் துணைவராகிய உடையவரை மறவற்க! என்று உபதேசித்தும், கிராமங்கள்தோறும் தாமே சென்றும், சரமூர்த்திகளை அனுப்பியும் ஆங்காங்கு உபதேசஞ் செய்தும் செய்வித்தும் பலரையும் நல்வழிப்படுத்தி ஆண்மக்களைப் போலவே பெண்மக்களும் கல்வியறிவுடையராகவும், தீக்ஷாசமஸ்காரம் பெற்றுத் தூய்மையுடையராகவும் இலிங்கதாரணஞ் செய்துகொண்டு சிவபூசை செய்யும் பாக்கியசாலிகளாகவும், வீடுகள்தோறும் கல்வி வளமும் கற்பின் பெருமையும் சைவமணமும் கமழ்ந்து நிறையும்படிச் செய்துவந்தனர். அதனால் ஆண்மக்கள் அனைவரும் தாம் செய்யும் எவ்வித வைதிக லௌகிக கிரியைகளனைத்திற்கும் யாதொரு தடையு மின்றித் தத்தம் செயலை நடாத்திப் பெருஞ் செல்வராக வாழ்ந்து வந்தனர். (தொடரும்).

வருணாச்சிரமப் பிரகாசிகை.

ஆஸ்தான வித்துவான் சிரசி. குருசாந்த சாஸ்திரிகள், மைசூர்.

ஸ்ரீ குருவினால் யாவன் தீக்ஷையைப் பெறுகின்றானோ அவன் தனது பூருவஜாதி குலாச்சிரமங்களினால் விடப்படுகின்றான். அப்படிப்பட்ட தீக்ஷிதனாகிய மனிதனுக்குப் பிராமணாதி வருணவிவகாரமாவது, பிரமசரியாதி விவகாரமாவது ஒன்றுமில்லையென்று சிலர் கூறத் தொடங்கியிருக்கின்றனர். இந்த ஆராய்ச்சியில், பற்பல வகையான கட்டைகள் தீயினால் எரிக்கப்பட்டபொழுது அக்கட்டைகளின் பூருவசாதி பேதங்க ளனைத்தும் அழிந்து தீமயமானாற்போலச் சிவதீக்ஷையைப் பெற்றதன்மேல் தனது பூருவசாதி குலபேதங்களனைத்தும் அழிவுபடச் சிவசொரூபனாகின்றானென்னும் பொருளமைந்த "யதேந்தநேஷு தக்தேஷு கோவாபேத: ப்ரகீர்த்யதே" (எந்தக்

கட்டைகள் தீயினல் பற்றப்பட்டனவோ அவை முன்னிருந்த பேதத்தினின்றும் விடுபடுகின்றன) முதலான சித்தாந்தத்தில் ஆங்காங்கு கூறப்பட்ட சில சுலோகங்களை மாத்திரம் எடுத்துக்கொண்டு அதிகாரத்தை விசாரியாமலும் முன்பின்னுள்ள தொடர்பை ஆராயாமலும் தமது கருத்தை நிலைநாட்டத் தொடங்குகின்றார்கள். இங்ஙனம், தத்தமக்குப் பொருத்தமான சுலோகங்களை மாத்திரம் பிரமாணமாக எடுத்துக்கொண்டு தமது கருத்திற்கு விரோதமான சுலோகங்களை இடையில் விடுப்பதனால், இது சாஸ்திர மரியாதையைக் கடக்கின்றதாகின்றதேயன்றி இதனல் யாதும் அடையப் பெறுவது ஒன்றின்று.

சாத்திரத்தில் விதிவாதம் என்றும், அருத்த வாதம் என்றும் இரண்டு பிரிவுகள் உள்ளன. குழந்தைகட்கு மருந்தை யுட்கொள்வதில் ஊக்கம் உண்டாக்குதற் பொருட்டுத் தின்பண்டங்களில் மருந்தைக் கலந்து கொடுப்பதுபோல முடிவான வீடுபேற்றிற்கு அங்கம் எனப்படும் சிவதீக்ஷை முதலியவற்றில் மனிதருக்கு ஊக்கமுண்டாக்குதற்பொருட்டுச் சித்தாந்த நூல்களில் "யதேந்தநேஷு தக்தேஷு" முதலிய பற்றக்கூடிய வாக்கியங்கள் கூறப்பட்டிருக்கின்றன. இவைகள் விதிவாக்கியங்களெனக் கூறப்படா. சமயத்திற்கேற்றவாறு அவ்வப்பொருளின் புகழை எடுத்துக் கூறுவதன்கண்ணே அருத்த வாதத்திற்குக் கருத்தே யன்றித் தனது வாக்கியார்த்தத்தில் பிராமாண்யமின்று. "யதேந்தநேஷு தக்தேஷு, நதத்ரஜாதி பேதோஸ்தி" முதலிய வாக்கியங்கள் கேவல அர்த்த வாதங்களேயன்றி விதிவாதங்கள் ஆகா. தீக்ஷாப்பிரகரணத்தி (அதிகாரத்தி)ல் கூறிய இத்தகைய வாக்கியங்களைப் போலவே இலிங்க தாரணப் பிரகரணம், உருத்திராக்க தாரணப் பிரகரணம், மந்திரப் பிரகரணங்களிலும் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றுட் சிலவற்றை வாசகரின் தெளிவிற்காக ஈண்டு காட்டவேண்டியதாகின்றது.

"ப்ராஹ்மணா: க்ஷத்ரியா வைஸ்யா சூத்ராஸ் சேத்யந்ய ஜாதய:,
லிங்கதாரண மாத்ரேண சிவாஏவ நசம்சய:"

யார் குருவினல் சிவலிங்கத்தைப் பெறுகின்றாரோ அவர் பிராமணராகுக, க்ஷத்திரியராகுக, வைசியராகுக, சூத்திரராகுக அல்லது கடைப் பிறப்பாளராகுக. யாவரும் சிவசொரூபம் உடையவராகின்

ரூர் என்பதில் யாதொரு ஐயப்பாடுமில்லை. இந்தச் சுலோகத்தில் "லிங்கதாரண மாத்ரேண" என்னும் பதமிருப்பதனால் இலிங்க சம் பந்தமான யாதொரு அனுட்டானமும் வேண்டுவதின்று. இலிங்க தாரணம் ஒன்றினாலேயே சிவ சொரூப சித்தி உண்டாகுமென்று தெளிவாக விளங்குகின்றது.

"சக்ருதுச்சார மாத்ரேண பஞ்சாக்ஷர மகாமநூ:
சர்வேஷாமபி ஜந்தூநாம் சர்வபாப க்ஷயோபவேத்"

யார் தமது வாழ்நாளில் ஒருமுறை பஞ்சாக்கர மகாமந்திரத்தை உச் சரிக்கின்றனரோ அவர் சகல பாபங்களினின்றும் விடுதலை பெற்றுப் பரிசுத்தாத்மாவாகின்றனர்.

ப்ரஹ்மஹா மத்யபாயீச ஸ்வர்ண ஹ்ருத்குரு தல்பக:
மாத்ருஹா பிதுர்ஹாச்சைவ ப்ருணஹா க்ருதகாத:
ருத்ராக்ஷ தாரணாதேவ முச்யதே சர்வபாதகை:

எவர் உருத்திராக்கத்தை தரித்திருக்கின்றனரோ அவர் பிரமஹத்தி, குருபத்னி கமனம், மதுபானம், மாதுரு பிதுரு ஹத்தி முதலிய கொடிய பாதகத்தைச் செய்தனராயினும் அப்பாபங்களி னின்றும் விடுதலை பெறுவர்.

"ததா சேத் பஸ்மநா குர்யாத்ஸ ருத்ரோ நாத்ர ஸம்சய:" எவர் விபூதிதாரணமுடையரா யிருக்கின்றனரோ அவர் உருத்திரமூர்த்தி என்பதில் சிறிதும் ஐயமின்று. இங்ஙனம் சித்தாந்த சிகாமணி முதலிய நூல்களில் அதிகார முறைப்படி அந்தந்த விபூதி ருத்திராக்கமுதலிய பொருள்களை வேண்டியவளவு கொண்டாடியிருக்கின்றனர். இந்த வாக்கியங்களனைத்தும் மோக்ஷாங்கமெனப்படும் தீக்ஷை, இலிங்கதார ணம், விபூதி ருத்திராக்கதாரணங்களில் முமுக்ஷுக்கள் (முத்தியில் விருப்புடையர்) ஆகிய பெரியாரால் அவஸ்யோபாதேயம் (முக்கியமாக ஏற்றுக்கொள்ளத்தக்கது) என்பதனை நிலை நாட்டுவதற்காகவே எடுத்துக் கூறிய அவ்வப்பொருள்களின் புகழ் வடிவமான வாக்கியங்களேயல்லது விதிவாக்கியங்களல்ல. ஆனால், இந்த வாக்கியங்களை விதிவாக்கியங்க ளென்றே பொருள் செய்கின்ற சமயத்தில் சிவதீக்ஷையைப் பெற்றபின் னர் வீரசைவனால் முக்கியமாகக் கொள்ளத்தக்கனவும், மிகவருந்தி

யடையத்தக்கனவும், பிரம்ம வித்தியாங்கமானவையுமான சடுஸ்தலா சாரணைகள் முக்கியமானவையல்லவென்றே கூறவேண்டியதாகின்றது. சிவதீக்ஷையானவுடனேயே உருத்திர வடிவம் கிடைத்ததன்மேல் திரும்பவும் உருத்திர வடிவம் கிடைக்கவேண்டிச் சடுஸ்தல உபாசனா மார்க்கம் பிஷ்டபேஷண (பிசைந்த மாவைப் பிசைதல்) ஞாயப்படிக் கூறியது கூறலென்னும் குற்றமுடையதாகின்றது. இலிங்கதாரண மொன்றினாலேயே சிவத்தன்மையுண்டானதன்மேல் திரும்பவும் சிவ லிங்கசம்பந்தமான கிரியா நுட்டானங்களெதற்கு? விபூதிதாரணமொன் றினாலேயே உருத்திர ரூபங்கிடைத்துவிடுமாயின் பின்னரும் உபாசனா மார்க்கம் வேண்டுமோ? உருத்திராக்க தாரண மொன்றினாலேயே பாபமனைத்தும் தொலைந்ததன் பின்னரும் பாபக்கேட்டிற்கு நெறியான உபாசனைகளை ஏன் கைக்கொள்ளல்வேண்டும்? ஆத்மாவானவன் அத னதனால் தூய்மையான கிரியையுடையவனாகி வந்த பின்னர், சிவதீக்ஷா பூர்வகமான இலிங்கதாரணஞ் செய்துகொண்டதன்மேல், முக்தியை யடைதற் பொருட்டு ஆசாரியராணைப்படி ஏற்றுக்கொண்ட அப்பிரா கிருத விரதங்களைக் குறைவின்றி நடத்திக்கொண்டுவர, மெல்ல மெல்ல சடுஸ்தல மார்க்கத்தை யடைந்து, சிவசொரூபத்தை யடைகின்றான்; இதனிடையில் விரதத்திற்குக் குறைவுண்டானால் பதிதனாகின்றான்; வாக்கியங்களுக்கே பொருளில்லாமற் போகின்றதல்லவா? ஒருவன் முறைப்படி அடைய வேண்டிய சித்தியை முதன் முறையிலேயே அடைந்தாவிட்டால் பின்னரும் அதன் சம்பந்தமான முயற்சிகள் வேண்டுமா? நிதியைப் பார்ப்பதற்காக அஞ்சனம் வேண்டும். அஞ் சனத்திற்காக முயற்சிக்கும்பொழுதே வேண்டிய நிதி கிடைத்துவிடு மாயின் மீண்டும் அஞ்சனந் தேடுவானேன். இன்னும் சிவதீக்ஷை யைப் பெற்ற அக்கணத்திலேயே மாயாப்படலங்கள் விலகிப்போவத னால் அப்பொழுதே கோப தாபங்கள் விட்டு நீங்க சிவனுடைய சர்வஞ்ஞத்துவாதி கல்யாணகுணங்கள் உதயமாதல் வேண்டும். இதன் பின்னர்தான் தேடவேண்டிய புருஷார்த்தங்கள் யாதுமில்லை. இங்ங னம் கேட்பது அனுபவ விரோதமும் சாஸ்திர விரோதமுமாகின்றது.

சிவதீக்ஷை பெற்ற மாத்திரத்தானே சிவனாகின்றான். இலிங்க தாரண மாத்திரத்தானே சிவனாகின்றான். விபூதிதாரண மாத்திரத் தானே சிவனாகின்றான். உருத்திராக்ஷதாரண மாத்திரத்தானே பரி

சுத்தனுகின்றான். ஒருமுறை மந்திரோச்சாரணஞ் செய்த மாத்திரத் தானே சர்வ பாபங்களினின்றும் விடுபடுகின்றான். இப்புகழ்ந்துரை வாக்கியங்க ளனைத்தும் ஒத்த கருத்துடையனவாயிருக்க, இதே கிரந் தத்தில் சிவத்தியானத்தில் முயற்சியை யுண்டாக்கும் அவசரத்தில் 'யார் சிவவென்று வாயினல் உச்சரிக்கின்றாரோ அவர் சண்டாள ராயினும் அவரது கூட்டத்தில் சஞ்சரி, அவரது கூட்டத்தில் கலந்து கொள், அவரது கூட்டத்தில் உணவுசெய்' என்ற புகழ்ந்துரை வாக் கியங்களும் சித்தாந்த சிகாமணி முதலிய நூல்களில் காணப்படுகின் றன. இத்தகைய வாக்கியங்களை 'சிவநாமோச்சாரணம் யாவராலும் கொள்ளத்தக்கது' என்றெடுத் தோதியதாக ஏற்றுக்கொள்ளாது விதி வாக்கியமென்று கொண்டால் அர்த்த வாதத்திற்கே அழிவு வந்து நேரும். இன்னும் இதனுல் இலிங்கதாரணம் இல்லாதவராயினும் சிவநாமத்தை மாத்திரம் உச்சரிப்பவருடனும் விபூதி தாரணத்தை மாத்திரம் உடையவருடனும், உருத்திராக்கதாரணத்தை மாத்திரம் உடையவருடனும், யாதொரு பேதத்தையுங் கருதாது எல்லாவித விவகாரத்தையும் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதாகின்றது. ஆதலினுல் சித்தாந்த சிகாமணியில் காணப்படும் இந்த சுலோகங்கள் எல்லாம் மோக்ஷாங்கமெனப்படும் தீக்ஷை, இலிங்கதாரணம் முதலிய வற்றின் பெருமையை விளக்கவேண்டி வந்தனவே யன்றித் தமது பூருவசாதி குலாச்சிரமங்களை ஒழித்து விடுவதற்கு எழுந்தன அல்ல வென்று தெரிந்துகொள்ளல் வேண்டும்.

இத்தகைய பற்றுக்கோடான வாக்கியங்கள் வீரசைவ சித்தாந் தத்தில் மாத்திரம் காணப்படுவதேயன்றி துவிதாதி சகல சித்தாந்த நூல்களினும் காணப்படுகின்றன. வைஷ்ண தீக்ஷையை யடைந்து தப்தமுத்திராதிகளைத் தரித்து எவனொருவன் தாசனுயிருப்பின், அவனே மகாவிஷ்ணுவென்றே காணவேண்டுமென்று கூறப்பட்டிருப் பினும் அவையனைத்தும் முத்திராதிகளின் பவித்திரத்தை நிலை நாட்ட வந்தனவேயன்றி அவரவரிடத்துள்ள சாதிகுலாச்சிரமங்களைப் போக்க வந்தனவன்று. இதனுல், "யதேந்தநேஷுதக்தேஷு" முதலிய தீக்ஷாப்பிரகரண வாக்கியங்கள் அர்த்த வாதங்களேயன்றித் தமது குல முறையால் வந்த சாதியாச்சிரமங்களைக் கெடுத்து வீரசைவ மதத்தி னரையெல்லாம் ஒரே குலத்தினராக்குதற் கெழுந்த விதிவாக்கியங்க

ளல்லவென்று உணர்ந்துகொள்வதே சாத்திரமரியாதையும், உலக மரியாதையும் ஆகின்றது. இதன் சம்பந்தமாக அறியவேண்டுவன வற்றுள் முக்கியமானவற்றைப்பின்னரும் காட்டவேண்டியதாகின்றது. அவை வருமாறு:—

வீரசைவ மதத்தாபகராகிய ஸ்ரீ ஜகத்குரு இரேணுகாசாரியர் அகத்திய மகா முனிவருக்கு வீரசைவ சித்தாந்தத்தை உபதேசிக்குஞ் சமயத்தில், "சிவசமஸ்காரயோகேன சிவதர்மாநுஷங்கிணாம், ப்ராகிருதாநாம் நதர்மேஷு ப்ரவ்ருக்திருப பத்யதே" யார் ஸ்ரீ குருவினால் சிவதீக்ஷையைப் பெற்று, அப்பிராகிருதங்களான சிவ தருமங்களை அங்கிகரிக்கின்றனரோ அவர் பிராகிருதங்களான பைதாமக தருமங்க (சிவதருமமல்லாத பிற தருமங்க) ளில் பிரவர்த்திப்பதில்லையென்று உபதேசித்திருப்பதனால், சிவதீக்ஷையைப்பெற்றவர் பிராகிருத வருணாச்சிரம தருமங்களை விடுத்து அப்பிராகிருதமான வருணாச்சிரம தருமங்களை அநுட்டிப்பதற்கு ஆரம்பித்திருக்கின்றாரென்று சித்திக்கின்றது. இதனால் வருணாச்சிரமங்கள் அப்பிராகிருதம், பிராகிருதங்களென இரண்டு வகையுண்டென் றேற்படுகிறது. சிவதீக்ஷையைப் பெற்ற மனிதன் பிராகிருத தருமங்களைவிடுத்துச் சிவதருமங்களை அநுட்டிக்க வேண்டுமென்று ஏற்படுவதனால் வீரசைவர்களுக்கே பிராகிருத வருணாச்சிரம தருமங்களில்லையென்று கூறவேண்டுவதல்லது அப்பிராகிருத வருணாச்சிரம (சிவ) தருமங்களில்லையென்று எப்பொழுதும் கூறுவது பொருந்தாது. இந்த அபிப்பிராயத்தை இரேணுக பகவத்பாதர் சித்தாந்த சிகாமணியின் பூருவாஸ்ரய நிரசனத்தலத்தில்,

"விசுத்தா: ப்ராகிருதாஸ்சேதி த்விவிதா மாநுஷா: ஸ்மிருதா:
சிவசம்ஸ்காரிண: சுத்தா: ப்ராகிருதா இதரே மதா:
வர்ணாஸ்ரமாதி தர்மாணாம் வ்யவஸ்தாஹி த்விதா மதா,
ஏகா சிவேந நிர்த்திஷ்டா ப்ரஹ்மணைகதிதாபரா,
சிவோக்த தர்மநிஷ்டாது சிவாஸ்ரம நிஷேவிணாம்
சிவசமஸ்கார ஹீநாநாம் தர்ம: பைதாமஹ: ஸ்மிருத:"

மனிதர்களில் சுத்தரென்றும, பிராகிருதரென்றும் இரண்டு பிரிவினருண்டு. சிவதீக்ஷா சமஸ்காரமுடையவரே சுத்தர் எனப் பெறுவர்;

சிவதீக்ஷையில்லாதவரே பிராகிருதரெனப்படுவர். அப்பிராகிருதவருணாச்சிரம தருமங்கள் சிவபெருமானல் அருளிச்செயப் பெற்றவை என்றும், பிராகிருதங்கள் பிரமனல் கூறப்பட்டவை என்றும் விளக்கப்பட்டிருப்பதனுல் "யதேந்தரேஷு தத்தேஷு" முதலிய தீக்ஷாப் பிரகரணத்தில் கூறப்பட்ட சுலோகார்த்தங்கள் பிராகிருத வருணச்சிரம தருமங்களை விலக்கி, அப்பிராகிருத வருணச்சிரம தருமங்களை விதித்திருப்பதனுல், சிவதீக்ஷாசமஸ்காரங்கள் வருணச்சிரமங்களைச் சிறந்தனவாகக் கொள்வதே யன்றிக் கண்டித்தனவெனலாகா. அப்படியே யாகுக!

பாரமேஸ்வராகமத்தைப் பிரமாணமாகக்கொண்டு விளங்குகிற வீரசைவ தருமசிரோமணியின் இரண்டாவது பரிசேதத்தில், 'இலிங்கம் கல்லினுல் செய்யப்பட்டிருப்பினும் எப்படிப் பூசிக்கத்தகுந்ததாகின்றதோ அப்படியே ஸ்ரீ குருவினல் சிவதீக்ஷையைப் பெற்ற மனிதன் நீச குலத்தில் பிறந்தவனுயினும் பூசிக்கப் பெறுவான்; நதிகள் கடலையடைந்த மாத்திரத்தானே கடல் வடிவ மாயினற்போலவும், இரச குளிகையை யடைந்த மாத்திரத்தானே தாமிரம் பொன்னுயினற்போலவும் சிவ தீக்ஷையைப் பெற்றமாத்திரத்தானே சார சோர சண்டாளராயினும் அவரனைவரும் சிவத்துவத்தை யடைகின்றனரே யன்றி மீண்டும் பசுத்துவத்தையடையார் என்று சிவதீக்ஷா லிங்கதாரணப் பிரபாவத்தைக்கூறி, அதன்மேல் 'தீக்கையைப் பெற்றவன் சாதிபேதத்தைப் பாராட்டலாகா தென்னும் வசனங்களனைத்தும் இலிங்காங்க சாமர்ஸ்யத்தைப் பெற்ற சீவன் முக்தனுகிய இலிங்காரூடனைப் பற்றிப் போதித்ததேயன்றித் தீக்ஷை பெற்றோரனைவரையும் குறித்துக் கூறியதன்று' என்று சமாதானத்தைக் கூறி, திடமான சீவன் முக்தாவத்தையைப் பெற்றிருப்பினும், தீக்ஷையானதன் பின்னர் வருணச்சிரமங்கள் ஒழிந்துபோகின்றனவென்று எண்ணிக்கொண்டு சாத்திர சம்மதமான வருணச்சிரம ஆசாரங்களை விடுத்துச்சாதியில்லை குலமில்லை, ஆச்சிரமமில்லை, பெண் ஆண் என்ற வேறுபாடில்லை, யாவரும் சிவசொரூபிகளேயாகின்றுரென்று கூறிக்கொள்ளும் சுவேச்சையாசாரிகளாகி வருணச்சிரம ஆசாரணையுள்ளவரும் மடத்தாருமாகிய குருவினல் சமஸ்காரத்தை யடையாமலேயே அடையாளத்திற்காக இலிங்கத்தைத் தரித்துக்கொண்டிருக்கின்ற தாழ்ந்த வகுப்பினருடன்

தீக்ஷா சம்பன்னரான பரம்பரை வீரசைவப் பிராமணர்களில் "நதத்ர ஜாதிபேதோஸ்தி" என்பனவற்றை மேற்கொண்டு இலிங்கதாரிகளனை வரும் ஒன்றேயென்று அபேதமாகக்கருதி உணவாதி விவகாரங்களில் கலந்துகொள்கின்றனரே; அப்படிப்பட்டவர் மகா தோஷமுடையவ ராகி முடிவில் நரகத்தையனுபவிப்பர் என்று' பிரதி பாதிக்கப்பட் டிருக்கிறது.

இங்ஙனம் தமது கொள்கைக்கு விரோதமான வாக்கியங்களை விடுத்து பூருவ பக்கமான இலிங்கதாரணப் புகழ்ச்சி ரூபமான வாக்கி யங்களையே எடுத்துக் காட்டுவரேல் அவர் சித்தாந்தத்தை மேற்கொள் பவராகார். ஆதலினால் வீரசைவர்களில் வருணமில்லை, ஆச்சிரம மில்லை, குலமில்லை யென்று மனத்திற் றோன்றியவாறு வாதாடும் வாதிகள் தமது வாதத்தை விடுத்துக் குலவாதத்தை மேற்கொண்டு முன்னோர்களைப்போலத் தமது குலாசாரக் கட்டளைக் கேற்றவாறு நடந்து சிவாகமங்களை யருளிச்செய்த பரமாசாரியரான பரமேசுவர னது கருணைக்குப்பாத்திரராகி இம்மை மறுமைப் பயன்களையடைந்து சுகவாழ்வினராக வேண்டுமென வேண்டுகின்றேன்.

தீக்ஷையே மோக்ஷசாதனம்.

விசேட விஷயங்கள்

வீரசைவ சமயாசார சீலர்களே! விதிப்படி தீக்ஷை பெற்று இஷ்டலிங்க பூசைசெய்ய விரும்பும் வீரசைவர்கள் முதற்கண் அறிந்து கொள்ள வேண்டுவன பிராணாயாம முதலிய விசேஷ விஷயங்களாம். இவ்விஷயங்கள் வாதுளாகமம், பாரமேஸ்வராகமம், யோகஜாகமம், மந்திர ரகஸ்யம், மந்திர தேவதாப் பிரகாசிகை, பிரபஞ்ச சாரம், மந்திர மகோததி, இலிங்க புராணம், அக்கினி புராணம், சித்தாந்த சேகரம், கிரியாசாரம், வீரசைவாசார கௌஸ்துப முதலிய உயர்ந்த கிரந்தங்களிலிருந்து சுருக்கி யெழுதப்படுகின்றன. அவ்வப் பிரமா ணங்கள் அனைத்தும் வட மொழியின்கண் இருத்தலானும், விரிப் பிற்பெருகுமாதலானும் அவற்றின் கருத்தை மாத்திரம் இதன்கண்

எழுதலாயினேம். அறிய விரும்புவோர் அந் நூல்களைக் கற்று ஆராய்ந்துணர்க.

பிராணயாமம் :—'பிராணன்' என்னும் மொழிக்குத் தனது தேகத்திற் றோன்றும் வாயு என்பது பொருள்; 'யமம்' என்பதற்கு அதைத் தடுப்பது என்பது பொருள்; எனவே பிராணன், அபானன் என்னும் வாயுக்களைத் தடுப்பதே பிராணயாமம் எனப்பெறும். இது பூரகம், கும்பகம், இரேசகம் என மூவகைப்படும். நாசியின் வலப்பக்கத்துத் துளை சூரியநாடி எனவும், இடப்பக்கத்துத் துளை சந்திரநாடி எனவும், துவாதசாந்தமாகிய நடுத்துளை சுழுமுனைநாடி எனவும் பெயர்பெறும். கையிலுள்ள ஐந்துவிரல்களுள் பெருவிரல் அங்குஷ்டம் எனவும், சுட்டுவிரல் தர்ஜனி எனவும், நடுவிரல் மத்திமை எனவும், மோதிரவிரல் அநாமிகை எனவும், சுண்டுவிரல் (சிறுவிரல்) கனிஷ்டிகை எனவும் பெயர்பெறும். வாயுவை இழுத்துவிடுக்குங்கால் ஐந்துவிரல்களுள் கனிஷ்டிகை, அநாமிகை என்னும் இரண்டும் இடதுநாசியின் மேலும், அங்குஷ்டம் ஒன்றும் வலதுநாசியின் மேலும், மத்திமை தர்ஜனி என்னும் இரண்டும் நடுநாடியின்மேல் நிமிர்ந்தும் இருக்க அமைத்துக்கொள்ளல் வேண்டும்.

பூரகம் :—வலக்கையின் கனிஷ்டிகை, அநாமிகை, அங்குஷ்டம் என்னும் மூன்று விரல்களினால் நாசியின் இடம் வலமாகிய துளைகளை அழுத்திவிடுங்கால் முதன்முறையில் கனிஷ்டிகை அநாமிகைகளினால் இடத்துளையை அழுத்தி வலத்துளையை அங்குஷ்டத்தினால் அழுத்தாது உள்ளே நிற்கும் வாயுவை வெளியே விடுத்துப் பின்னர், அகார உகார மகாராத்மகமாக விளங்கும் பிரணவத்தின் முதற்கண்ணுள்ள பிரமனாதி தேவர்கள் வடிவாகிய அகாரத்தைத் தியானித்துச் சந்திராம்சமான இடது நாடியினால் (அங்குஷ்டத்தினால் வலது நாடியை அழுத்தி கனிஷ்டிகை அநாமிகைகளினால் இடது நாடியை அழுத்தாது) வெளியில் விடுத்த வாயுவை மேலே யிழுத்து நிறுத்துவது பூரகம் எனப்பெறும்.

கும்பகம் :—இரண்டு துளைகளையும் அடைத்துக்கொண்டு விஷ்ணுவாதி தேவர்கள் வடிவாகவிளங்கும் உகாரத்தைத் தியானித்துக்

கொண்டு அக்கினி அமிசமான சுழுமுனை நாடியில் (நடு நாடியில்) நிறைகுடம்போல் வாயுவைச் சலனமின்றித் தடுத்து நிற்பதே கும்பக மெனப்பெறும்.

இரேசகம்:—கட்டைவிரலை அழுத்தாது விடுத்து உருத்திராதி தேவர்கள் வடிவாக விளங்கும் மகாரத்தை தியானித்துச் சூரியன் அமிசமாகிய பிங்களநாடி (வலதுநாடி)யினுல் கும்பித்துநின்ற வாயுவை மீண்டும் வெளியே விடுவது இரேசகம் எனப்பெறும்.

இங்ஙனம் மூன்றையும் ஒருமுறை செய்தால் ஒரு பிராணுயாமம் எனக் கருத வேண்டும். மேற்கண்டவாறு பிரணவ மந்திரத்தால் அப்பியாசிப்பது ஒருவகை. தனித்தனி ஒவ்வொரு முறையும் வியாகிருதி சகிதமான பிரணவத்தோடு கூடிய (ஓம் பூ: என்பது முதலியவற்றுடன் கூடிய) காயத்திரி மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு பூரகம் கும்பகம் இரேசகங்களைச் செய்வது மற்றொருவிதம். இந்தப் பிராணுயாமம் சகர்ப்பம் எனவும் அகர்ப்பம் எனவும் இருவகைப் படும். மந்திர ஜெபத் தியானங்களினுல் கூடியிருப்பது சகர்ப்பம்; அவையன்றியிருப்பது அகர்ப்பம். பூரக முதலியவற்றுள் ஒவ்வொன்றையும் 12 மாத்திரைக் காலவளவாகச் செய்வது கடைத் தரமுடையது. 24 மாத்திரைக் காலவளவாகச் செய்வது மத்தியத் தரமுடையது. 36 மாத்திரைக் காலவளவாகச் செய்வது முதற்றரமானது. பழகத் தொடங்குவோர் முதலில் 12 மாத்திரைக் காலவளவாகவே ஆரம்பித்து வரவர முறையாகப் பெருக்கிக் கொள்ளுதல் வேண்டும். 12 மாத்திரைக் காலவளவாக மூன்றையும் ஒருமுறை செய்தால் அதற்கு ஒரு உத்காத மென்று பெயர். கும்பகத்தை மாத்திரம் 12 மாத்திரைக் காலஞ்செய்து பூரக இரேசகங்களை இயன்றதோர் காலவளவிற் செய்தாலும் செய்யலாமென்பது ஒரு சாரார் கொள்கை.

பிராணுயாமம் செய்யும்பொழுது இடக்கையினுல் செய்யும் கை நொடிப்பொழுதே மாத்திரை எனப்படும். சித்தாந்த சேகர முதலிய சில நூல்களில் மூன்றுமுறை கைநொடிக்கும்பொழுதே ஒரு மாத்திரைக் காலமெனவும் கூறப்பட்டுள்ளது. இத்தகைய பிராணுயாமஞ் செய்வதனுல் யாது பயன் என்னில்,—தேகத்திலுள்ள சோம்பல்

முதலிய தோஷங்கள் நீங்கும். கரணங்களனைத்தும் நல்ல நிலையில் தொழிற்படும். பழக்க முதிர்ச்சியினால் வாயுநிற்பச் சலனமுடைய மனமும் சலனமுற்று மந்திரஜெபத் தியானாதிகட்கு இடந்தந்து நிற்கும். உத்தமோத்தமமான பழக்கம் கைவரின் மனம் வாக்குக் காயங்களின் குறைகளனைத்தும் நீங்க, திவ்விய சாந்தியாதி குணங்கள் வளர முடிவில் சிவசாயுஜ்ஜியம் கிடைக்கப்பெறும். பிராணாயாமம் என்பது யோகமார்க்கத்தில் ஓரங்கமாகும். இன்னும் இதன் சம்பந்தமான இதர விஷயங்கள் விரிப்பிற் பெருகுமாதலின் சாத்திர சம்பந்தரான குருமுகமாக முறையுடனறிந்து பழகுவதே சாதகர்களின் கடமையாகும். இந்தப் பிராணாயாமத்தைச் செய்யாது செய்யும் சிவபூசை முதலியனவும், முயற்சியோடு பழகாது பார்ப்பவர்க்குப் பாவனையாக நடித்துக்காட்டும் பிராணாயாமமும் பயனைத்தரா வென்பதை நன்குணர வேண்டும்.

திருமுருகாற்றுப்படை.

(முன் தொடர்ச்சி)

க. திருப்பரங்குன்றம்.

சக. சூரர மகளிர்.

துணையோ ராய்ந்த இணையீ ரோதிச்
செங்கால் வெட்சி சீறித ழிடையிடுபு
பைந்தாட் குவளைத் தூவிதழ் கிள்ளித்
தெய்வ வுத்தியொடு வலம்புரி வயின்வைத்துத்
திலகந் தைஇய தேங்கமழ் திருநுதல்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்
துவர முடித்த துகளறு முச்சிப்
பெருந்தண் சண்பகஞ் செரீஇக் கருந்தகட்
டுளைப்பூ மருதி னொள்ளிண ரட்டிக்
கிளைக்கவின் றெழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்

பிணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக
வண்காது நிறைந்த பிண்டி யொண்டளிர்
நுண்பூ ணாகந் திளைப்பத் திண்காழ்
நறுங்குற டுரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேங்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகி ழிளமுலைக் கொட்டி விரிமலர்
வேங்கை நுண்டா தப்பிக் காண்வர
வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெறியாக்
கோழி யோங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிதென் றேத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகஞ் சிலம்பப் பாடிச்
... ... ஆடுஞ் சோலை
மந்தியு மறியா மரன்பயி லடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தட்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்.

பதவுரை:—(சூர மகளிர்) துணையோர் ஆய்ந்த – விளையாடும் ஆயமகளிர் நன்றென் றாராய்ந்த, இணை – கடையொத்த, ஈர் ஓதி – நெய்ப்பசையினையுடைய மயிரிலே, செங்கால் வெட்சிச் சீறிதழிடை – சிவந்த காலையுடைய வெட்சியுடைய சிறிய பூக்களை (விடு பூவாகத் தூவி) அதற்கு நடுவே, பைந்தாள் குவளை – பசுத்த தண்டினையுடைய குவளையினது, தூ இதழ் கிள்ளியிடுபு – தூய்மையான இதழ்களைக் கிள்ளியிட்டு, தெய்வ உத்தியொடு – சீதேவியென்னுந் தலைக்கோலத்துடனே, வலம்புரி – வலம்புரி வடிவாகச் செய்த தலைக்கோலத்தையும், வயின் வைத்து – வைத்தற்குரிய இடத்தே வைத்து, திலகம் தைஇய – திலகமிட்ட, தேங்கமழ் – மணம் நாறுகின்ற, திருநுதல் – அழகினையுடைய நெற்றியின் கண்ணே, மகரப் பகுவாய் – சுறா மீனினது அங்காந்த வாய்வடிவாகப் பண்ணின தலைக்கோலம், தாழ மண்ணுறுத்து – தங்கப்பண்ணி, துவரமுடித்த – (வேண்டுவன கூட்டி) முற்றமுடித்த, துகள் அறும் முச்சி – குற்றம் அறுகின்ற கொண்டையிலே, பெரும்தண் சண்பகம் செரீஇ – பெரிய குளிர்ந்த சண்பகப்

பூவைச் செருகி, கருந்தகட்டு — கரிய புறவிதழினையும், உளை — பிடரி மயிர்போன்ற) துய் என்னும் மகரந்தத் தண்டினையும் உடைய, பூ மருதின் — பூக்களையுடைய மருதமரத்தினது, ஒள் இணர் அட்டி — ஒள்ளிய பூங்கொத்துக்களை அதன்மேலிட்டு, கிளை — (பசுமையான) இனவரும்புகளினின்றும், கவின்று எழுதரு — அழகுபெற்று மேலே போந்து தோன்றுகின்ற, கீழ்நீர்ச் செவ்வரும்பு — நீர்க்கீழ் நின்ற சிவந்த அரும்பை, இணைப்புறு — கட்டுகின்ற, பிணையல் — மாலையை, வளைஇ — வளைய வைத்து, வண் காது — வளப்பமுடைய காதிலே, துணைத்தகநிறைந்த பிண்டிஒண் தளிர் — தம்மில் ஒத்தற்குப்பொருந்த இட்டு நிறைந்த அசோகினது ஒள்ளிய தளிர், நுண் பூண் ஆகம் திளைப்ப — நுட்பமான வேலைப்பாடமைந்த அணிகலனையுடைய மார்பிடத்தே அசையாநிற்க, திண்காழ் நறுங்குறடு — திண்ணிய வயிரத்தையுடைய மணமுள்ள (சந்தனக்) கட்டையை, உரிஞ்சிய — உரைத்த, பூம்கேழ் — பொலிவினையும் நிறத்தினையு முடைத்தாகிய, தேய்வை — குழம்பை, தேம் கமழ் — மணம் நாறுகின்ற, மருது இணர் கடுப்ப — மருதம்பூவை அப்பினலொப்ப, கோங்கின் குவிமுகிழ் — கோங்கினது குவிந்த அரும்பையொத்த, இளமுலை கொட்டி — இளமையான முலையின் கண்ணே அப்பி, விரிமலர் வேங்கை நுண்தாது அப்பி — (அவ்வீரம் புலர்வதற்கு முன்னே) விரிந்த மலரையுடைய வேங்கைப் பூவினது நுண்ணிய மகரந்தத்தையும் அதன்மேலே அப்பி, வெள்ளில் குறுமுறி — விளவினது சிறிய தளிரை, கிள்ளுபு — கிள்ளி, காண்வர — அழகுவர, தெறியா — (ஒருவர்மேல் ஒருவர்) தெறித்துத் (தப்பாமற் பட்டபொழுது) என்று அடு விறல் — வஞ்சியாது எதிர்ந்து நின்று கொல்லுகின்ற வெற்றியையுடைய, கோழி ஓங்கிய கொடி — கோழி மேலாய் நின்ற கொடி, பெரிது வாழிய என்று ஏத்தி — நெடுங்காலம் வாழ்வதாகவென்று வாழ்த்தி, பலருடன் கூடி, சீர்திகழ் சிலம்பகம் — சீர்மை விளங்குகின்ற மலையிட மெல்லாம், சிலம்பப் பாடி ஆடும் — ஆரவாரிக்கப் பாடி யாடும், சோலை — சோலையினை யுடைய, மந்தியும் அறியா — (மர மேறுதல் தொழிலிற் சிறப்புடைய) குரங்குகளும் (மரங்களின் ஈட்டத்தால்) ஏறியறியாத, மரன் பயில் அடுக்கத்து — மரம் நெருங்கிய பக்கமலையிடத்து நின்ற, சுரும்பும் மூசா — (தான் விரும்புதலின்) வண்டினமுமொய்யாத, சுடர்பூ காந்தள் — நெருப்புப் போலும் பூவினையுடைய செங்காந்தளினது, பெரும் தண் கண்ணி—

பெரிய குளிர்ந்த கண்ணியை, மிலைந்த சென்னியன் — சூடிய திரு முடியினையுடையவன்.

பொழிப்புரை :—சூரர மகளிர், விளையாடும் ஆயமகளிர் நன்றென்றாராய்ந்த கடையொத்த நெய்ப் பசையினை யுடைய மயிரிலே சிவந்த காலையுடைய வெட்சியினது சிறிய பூக்களை விடுபூவாகத் தூவி, அதற்கு நடுவே பசுந்தண்டினையுடைய குவளையினது தூய்மையான இதழ்களைக் கிள்ளியிட்டுச், சீதேவி யென்னுந் தலைக்கோலத்துடனே வலம்புரி வடிவாகச் செய்த தலைக் கோலத்தையும் வைத்தற்குரிய விடத்தே வைத்துத், திலகமிட்ட மணம் நாறுகின்ற அழகினையுடைய நெற்றியின்கண்ணே சுறாமீனினது அங்காந்த வாய்வடிவாகப்பண்ணின தலைக்கோலம் தங்கப்பண்ணி, வேண்டுவன கூட்டி முற்ற முடித்த குற்றமறுகின்ற கொண்டையிலே பெரிய குளிர்ந்த சண்பகப் பூவைச் செருகிக், கரிய புறவிதழினையும் பிடரி மயிர்போன்ற துய் என்னும் மகரந்தத் தண்டினையும் உடைய பூக்களையுடைய மருத மரத்தினது ஒள்ளிய பூங்கொத்துக்களை அதன்மே லிட்டுப், பசுமையான இன வரும்புகளினின்றும் அழகுபெற்று மேலேபோந்து தோன்றுகின்ற நீர்க்கீழ் நின்ற சிவந்த அரும்பைக் கட்டுகின்ற மாலையை வளைய வைத்து ; வளப்பமுடைய காதிலே தம்மில் ஒத்தற்குப் பொருந்த இட்டு நிறைந்த அசோகினது ஒள்ளிய தளிர் நுட்பமான வேலைப் பாடமைந்த அணிகலனையுடைய மார்பிடத்தே அசையா நிற்க, திண்ணிய வயிரத்தையுடைய மணமுள்ள சந்தனக் கட்டையை உரைத்த பொலிவினையும் நிறத்தினையு முடைத்தாகிய குழம்பை மணம் நாறுகின்ற மருதம்பூவை அட்பினுலொப்பக் கோங்கின் குவிந்த அரும்பை யொத்த இளமையான முலையின்கண்ணே அப்பி, அவ்வீரம் புலர்வதற்கு முன்னே விரிந்த மலரையுடைய வேங்கையினது நுண்ணிய மகரந்தத்தையும் அதன்மேலே அப்பி, விளவினது சிறிய தளிரைக் கிள்ளி அழகுவர ஒருவர்மே லொருவர் தெறித்துத் தப்பாமற் பட்ட பொழுது, வஞ்சியாது எதிர் நின்று கொல்லுகின்ற வெற்றியினை யுடைய கோழி மேலாக நின்ற கொடி நெடுங்காலம் வாழ்வதாக வென்று வாழ்த்திப், பலருடன் கூடிச் சீர்மை விளங்குகின்ற மலையிடமெல்லாம் ஆரவாரிக்கப் பாடியாடும் சோலையினையுடைய மாமேறுதற் றொழிலிற் சிறப்புடைய குரங்குகளும் மரங்களின் ஈட்டத்தால்

ஏறியறியாத மரம் நெருங்கிய பக்க மலையிடத்து நின்ற தான் விரும்பு தலின் வண்டினமு மொய்யாத நெருப்புப்போலும பூவினையுடைய செங்காந்தளினது பெரிய குளிர்ந்த கண்ணியைச் சூடிய திருமுடியை யுடையவன் என்க.

(விரிவுரை)—சூரர மகளிர் கூந்தலிலே வெட்சிப் பூக்களை விடு பூவாகத் தூவி அதற்கு நடுவே குவளை யிதழ்களைக் கிள்ளியிட்டுத் தலைக்கோலங்களை வைத்தற் குரியவிடத்தே வைத்து, நெற்றியிலே மகரப் பகுவாய்த் தலைக்கோலந் தங்கப்பண்ணிக் கொண்டையிலே சண்பகப் பூவைச்செருகி மருதினது பூங்கொத்துக்களை அதன்மே லிட்டுச் செவ்வரும்பு மாலையை வளையவைத்து காதில்நிறைந்த அசோ கத் தளிர் மார்பிடத்தே யசையாநிற்க இள முலையிலே சந்தனக் குழம்பையப்பி அவ்வீரம் புலர்வதற்கு முன்னே அதன்மேல் வேங் கைப் பூவினது மகரந்தப் பொடியையப்பி விளவினது தளிரை ஒரு வர்மே லொருவர் தெறித்துத் தப்பாமற் பட்டபொழுது கோழிக் கொடி நெடுங்காலம் வாழ்வதாகுகவென வாழ்த்தி மலையிடமெல்லாம் எதிரொலி செய்யப் பாடியாடும் சோலை எனவும், அச்சோலையுடைய பக்க மலையிடத்தே நின்ற செங்காந்தளினது கண்ணியைச் சூடிய திருமுடியை யுடையவன் எனவும் வினைமுடிவு செய்க. இதனால் முருகப் பெருமானது அடையாளப்பூக் கூறினர். மகரப் பகுவாய் — அதன் வடிவாகச் செய்த தலைக்கோலத்திற்கு ஆகுபெய ராயிற்று. கவின் என்னும் பண்படியாகக் கவின்று என்னுந் தொழில் பிறந்தது. கீழ்நீர் — நீர்க்கீழ் என்னும் இயல்பு மரூஉ. அவ்வரும்பு மிகச் சிவத் தலின் ஒப்பனைக்குக் கொள்வர். மருதிணர் — சந்தனக் குழம்பின் நிறத்திற்குவமம். மந்தியும் — இவ்வும்மை சிறப்பும்மை.

பாவலர் விருந்து.

திருவாளர், அ. வரத நஞ்சய பிள்ளையவர்கள், தோரமங்கலம்.

(118-ம் பக்கத் தொடர்ச்சி.)

நம் பாவலர் பெருமான் எளிதாக ஓர் கணத்திற் கருதியமைக் கும் விசித்திரக் கற்பனைகள் சாமான்ய கவிகள் நெடுநாள் வருந்திக்

கருதினும் அமைக்குந் தரத்தனவல்ல வென்னும்படி விளங்குவன. மாதிரிக்காக அவற்றுள் ஒரு சிலவற்றை விளக்கி விருந்தயர்கின்றேன்.

வனவசைமாநகரின் தெருக்களில் யானைக் கூட்டங்களும், குதிரைத் திரள்களும் உலாவுகின்றன என்று கூற வந்தவர் பிறகவிஞர்களைப்போல அவ் யானைகள் மிகவலியுடையன, மும்மதம் பொழியும் முகில் போல்வன, நீலமலைகள் கால்பெற்றுக் கிளர்ந்தாலொப்பன, அக்குதிரைகளும் கட்புலங்கதுவாக் கடுஞ்செலவின, மிக அழகியன என்றிவ்வாறு கூறாமல், கற்போர் மிக வியப்புற்றுப் பன்முறை சுவைத்துச் சுவைத்து மகிழும்படி அரிய சிறந்ததோர் கற்பனை கொண்டமைகின்றார்.

ஈசனளித்த வொருகோட்டி யானைக் கியாங்க ளிணையாயின்
வாச வனைத்தாங் கீரிருகோட்டி யானை யெம்மை மானுமேனும்
பாச வுரற்கா லியானையோடு பாண்டி லிழுக்கும் பகடேயிற்
றேசி னிரதப் பரிசிறந்த வென்னும் பரிக டெருவகலா.

அந்நகரத் தெருக்களில் உலாவும் யானைகள், இந்திரனுடைய ஐராவதம் என்னும் யானை நான்கு கொம்புகளையுடையதாகலின், இரண்டு கோடுகளையுடைய தம்மினும் உயர்ந்ததெனக்கொள்ளப்படுமோ என்று ஆலோசித்தனவாம். ஆலோசித்தபோது ஈஸ்வர குமாரராகிய விநாயகரும் யானைமுக முடைமையால் அவரும் ஓர் யானையெனவே கருதி அவர்க்கு ஒற்றைக் கொம்புதானே என்று தேர்ந்தன. இரு கொம்புடைய தமக்கு ஒரு கொம்புடைய விநாயகர் சமானமாகவோ இழிவாகவோ கூறப்படாமல் உயர்வுடையவராகவே மதிப்பெய்தல் கண்டு கொம்பு குறைவது பெருமையை மிகுவிப்பதென முடிதலால் அவ்வொரு கொம்புடைய யானைக்கு இரு கொம்பிருந்தும் யாங்களிணையாகாமையேபோல எமக்கு நாற்கொம்புகளுடைய அவ்வைராவதம் இணையாவதொருபோதுமில்லை; அஃதெமக்கு ஒப்பாகுமெனின் யாங்களும் தனித்தனி விநாயகக்கடவுளை ஒப்ப மதிப்புறவேண்டும் என்று செருக்கித் திரிகின்றன.

இங்ஙனமே குதிரைகளும், சூரியனது ஒற்றைத் தேருருளையை ஈர்த்துச் செல்லும் எழுகுதிரைகள், நம்மினும் உயர்ந்தனவாகுமோ

என்று பரிசீலிக்கத் தொடங்கி, ஒருசக்கரத்தை இழுக்கும் அவ்வேழு குதிரைகளைப் பார்க்கினும், ஓர் வண்டியின் இரண்டு சக்கரங்களையும் இருபாலும் பூண்டு ஒவ்வொன்றையும் தனித்தனி இழுக்கும் இரண்டு கடாக்கள் மிகவுழைப்புள்ள தாகலின் அப்பகடுகளே வலிசிறந்தனவா யுயர்வு பெறவேண்டும். அங்ஙனம் உயர்வு உடையனவாகாது அக் குதிரைகளினும் மிகத்தாழ்வாகவே கருதப்படலால் வேலை மிகமிகக் குறைந்து உழைப்புக் குன்றுவதே பெருமைக்கு ஏதுவாகுமென்பது பெறுதும். பெறவே, அவ்வேழு குதிரைகளைப்போல ஒருசக்கரத்தை இழுக்குந் தொழிலையும் கொள்ளாது போர்முகத்திற் பொருவதற் கென்றே பயிற்றப் பெற்ற நாம் மற்றைக் காலங்களில் யாதோர் தொழிலுமின்றி உல்லாசமாகவே போதுபோக்குதலால் நாமே உயர் வுடையேமாகின்றேம். அன்றி நம்மினும் அப்பரிதியின் எழுபுரவிகள் உயர்ந்தனவாயின் அவற்றினும் மேற்கூறியவாறு கடாக்கள் உயர்வு பெற்றாகவேண்டும். அங்ஙனமாவது ஓர்காலுமில்லை. ஆகலின் நம் மினும் அப்பசும் புரவிகள் உயர்வெய்துவது ஓர்போதுமில்லை என்று செருக்கித் திரிகின்றன என்று அதிசயமாக இக்கற்பனையைக் கண் டமைக்கின்றார். நாம் கண்ணுற்ற எந்த நூலிலேனும் இக்கருத்தின் ஓரம்சமாவது பிறகவிகட்குப் புலப்பட்டதாகக் கூறமுடியாது. அடி களின் கூரிய மதிநுட்பம் இருந்தவாறென்னே பார்மின்!

நமது அடிகள் ஜோதிடம், தருக்கம், இலக்கணம் முதலிய நூற் களினின்றும் விஷயங்களை யெடுத்து உசிதமாகப் பல கற்பனைகளை உரியவிடங்களில் பெய்தமைக்கின்றார். இவர் தம் நுண்மாண் நுழை புலப் பெருக்கமும், அரும் பெறற் புலமையும், கற்பனை சுரக்கும் ஆழ்ந்த நூலாராய்ச்சி வன்மை மேம்பட்ட உள்ளமும் கருதி நோக்கு வோர் உள்ளத்தைக் கவராது ஒழியா.

மாயை யென்னும் பெண்மணியின் அபூர்வ அழகைக்கண்டு மாத வஞ் செய்யும் முனிவர்களும் மயக்குறுவாராயினர் என்ற பொருளை யுரைக்க வந்தவர், இவ்வாறு கூறாது, நாம் எல்லாம் உவந்து தலை யசைத்து நகைக்குமாறு ஜோதிட நூற் பொருளைக்கொண்டு சிலேடை யணியால் ஓர் அரிய கற்பனை பொருத்துகின்றார்.

இந்தக் கன்னி முழுமதிநோக் கெய்திச் செவ்வாய் வலியடைந்து
சந்தச் சிங்கந் தனையடுத்த தக்க வரவின் வலிசார்ந்து
முந்தைக் கோடிமீ னத்தலைவன் முனிவ ராகும் பகைவெல்லக்
கந்தப் பகழி பலவேழக் கருப்புச் சிலையிற் றேடுத்தன னால்.

ஓர் அரசன் தன் பகைவர்களை வென்று வாகைசூட வேண்டின் தன் ஜென்ம லக்கினத்திற்குத் தக்கவாறு கோட்சாரபல சம்பந்த முடைய காலபலம் வேண்டும். அவ்வண்ணமே மன்மதனுக்கும் தன் சுபாவ சத்துருக்களாகிய முனிவர் கூட்டங்களை வெல்வதற் கேற்ற நற்காலம் எதிர்ந்தது. எங்ஙனமெனின், மீனலக்கினத்தில் உதித்த வனாகிய ஒருவனுக்கு சத்துரு ஸ்தானமாகிய ஆறுமிடம் (சிங்கத்தில்) இராகுவிருந்தால் சத்துரு ஜெயமுண்டாகும். மேலும், அவனது பூர்வபுண்ய ஸ்தானாதிபனாகிய கடக சந்திரன் தொழில் ஸ்தான மாகிய 10-ம் இடத்திற்கு 10-ம் இடமாகிய விருத்தி ஸ்தானம் ஏழா மிடத்தில் (கன்னியில்) அமைந்தும், தனபாக்கியாதிபனாகிய செவ்வாய் (அவனே யுத்தகாரகனாகவும் இருப்பதால்) உச்சம் பெற்றுப் பலம் மிக (என்றால் மகரத்தில் லக்கினத்துக்கு 11-ம் இடமாகிய லாப ஸ்தானத்தில் இருக்க) போர் தொடங்கினால் வெற்றி பெறுதலில் ஐயுறவில்லை யன்றோ! மன்மதன் மீனத்தைக் கொடியாக வுடைய தலைவனாதலின் இந்தக் கன்னியினுடைய முழுமதி (முகம்) நோக் கெய்தி (பார்வையைத் துணைக்கொண்டு) செவ்வாய் வலியடைந்து (அவளது சிவந்த அதரங்கள் தரும் ஆசையையும் உப பலமாகப் பெற்று) சிங்கத்தையடுத்த பாம்பின் வலியையும் சாரப்பெற்று (இடை யின் அருகேயமைந்த பாம்பின் படம்போன்ற நிதம்பத்தின் வேட் கையையும் தனக் குறுதுணையாக ஏற்று) தன் கரும்புச் சிலையில் மல ரம்புகளைப் பெய்து முனிவர்களாகிய தன் பழைய சத்துருக்களை வெல்லலுற்றான் என்றமைத்த நயப்பாடு எத்தனை முறைபாராட்டினும் தகுவதொன்றன்றோ? மலரம்புகளை, கந்தப்பகழி என்று கூறிய சொல்லமைப்பு நம்முளத்தை விட்டகலாது என்றும் நிலவுதற்குரிய தன்றோ!

இனித் தருக்க நூலில் அநுமானப் பிரமாண உறுப்புக்களைக் கொண்டு ஓர் அதிசய கற்பனையைக் கண்டமைக்கின்றார்.

மாயையின் இடை மிக நுண்ணியது. கட்புலனாகாதது இழை யைப்பலகூறு செய்தமைத்தாலொப்பது என்று கூறலாமாயினும் அவற்றை விடுத்து,

"மாயை யிடையையுளண் முலையால் மற்றைமாதர் போலென்று
தூயகவிஞ ரநுமித்துச் சொல்லுமிடையாள்" என்றார்.

இம்மலை நெருப்புடைத்து, புகையுடைமையால் அடுக்களைப்போல எனவரும் அநுமானப் பிரமாணத்தின் அநுமிதி ஏது, திருட்டாந்தம் முதலியன நிரலேயமைய இம்மாயை இடையை யுடையவளேயாதல் வேண்டும். முலைகள் தோன்றிப் பெருத்தலின், (என்றால் அவற்றைத் தாங்குதற்குரிய உறுப்பு இருந்தேயாகல் வேண்டும் என்றபடி) மற்றைப் பெண்களுடைய முலையைச் சுமத்தற்கு இடையமைந்திருப்பக் காண் கின்றோம். அஃதேபோல, என்று கட்புலனாகாத பொருளை, அப் பொருளோடு நியதமாக வுடனிருக்கும் பொருட் புலப்பாடு கொண்டு துணிதல்போல் துணிதற்குரித்தாவதன்றி அவ்விடைக் காட்சியால் பெறக்கூடியதாக இல்லை யென்று எவ்வளவு சிறப்பாக எடுத்துக்காட்டு கிறார். மற்றோரிடத்தில், தருக்க நூலின் பல இடங்களில் மண்ணாற் செய்த கடமும் நூலாற் செய்த படமும், ஒன்றினென்று பாவ முதலிய வற்றிற்கு எடுத்தோதப்படுதலின் கடபட நியாயமெனப் பிரசித்த முற்று வழங்கும். அதனை நமது ஆசிரியர் பெருந்தகை, கடபட மென வழங்குவதன் உண்மை தேர்ந்தோம். அதாவது மாயையின் குடம்போன்ற முலைகளில் கச்சுச்சேர்த்தியதைக் கண்ணுற்றே, அக் காலத்தினின்று கடபட நியாயம் வழங்கத்தொடங்கிற்றுப் போலும், என்றொரு கற்பனையும் கற்பிக்கின்றார். அஃகியகன்ற அறிஞர்கட்குக் கற்பனைகள் தாமாகவே கருத்தில் முளைத்துக் கவின்பெறத் தோன்று மென்ப துண்மையேயாம். (தொடரும்.)

சிவானுபவம்.

ஸ்ரீமத் சச்சிதானந்த அன்னதான சுவாமிகள்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்."

பாம்பின் புற்றின்மேல் அடித்தால் அதனுள்ளிருக்கும் பாம்பானது சாகுமோ? அகோரமான தவத்தைச்செய்து உடம்பை வாட்டினுல் மாத்திரம் அதனுள்ளிருக்கும் மனமாதிய அந்தக்கரணங்கள் நாசமடையுமா? அந்தக்கரண ஒடுக்கமில்லையேல் அவற்றின் சம்பந்தமுடைய ஆத்மா சுத்தியடையுமா? ஆத்மா சுத்தி யடையாவிடின் அவ்வாத்மாவிற்குப் பரமேஸ்வரன் வெளிப்படுவரா? பரமாத்மாவாகிய பரமேஸ்வரன் ஆத்மசுத்தி யில்லாதவரை ஒருபோதும் நம்பமாட்டார். சனுதன வைதீக தருமானுசாரமாக ஒருவர்க்கு ஆத்மா சாக்ஷாத்காரமாக வேண்டுமானுல், சைவநெறி வாயிலாக சிவானுபவத்தை அடைய வேண்டுமானுல், சீவன் சிவனுக வேண்டுமானுல் கேவலம் புறத்தூய்மையான ஆசாரங்களே யன்றி அதனேடொப்ப அகத்தூய்மையான சித்தசுத்தியும் இன்றியமையாது வேண்டற்பாலதென்பது பெறப்படுகின்றது. ஒருவன் திரிகாலங்களினும் நீராடுதல் முதலியவற்ருல் புறத்தூய்மை பெற்றுச் சிவாராதனையை அஷ்டவித சோடசோபசாரங்களினுற் செய்யலாம்; ஒருவன் எப்பொழுதும் திருநீறு புனைந்து உருத்திராக்கமுடன் காவியாடையும் உடுத்தியிருக்கலாம்; மற்ருெருவன் கையில் ஜெபமாலை பிடித்திருக்கலாம்; ஆனுல், கருமமனைத்திற்கும் ஆதாரமான சித்தசுத்தியடைதலோ அரிதினுமரிது! சித்தசுத்தி யடையாதவன் எவனுயினும் சிவானுபவ சுகத்தை ஒருபோதும் அடையமாட்டான்.

நம் முன்னேர்களான முனிபுங்கவர்களோ புறத்தினும் அகத்தினும் தூய்மைபெற்ற மகாபரிசுத்தர்கள். அவர்களிடம் பாவனை பிரதானமா யிருந்தபடியால் அவர்கள் காணுதற்கரிய பரமசிவனைக் கண்டறிந்தார்கள். இந்த உலகத்தில் எந்தமத தருமநூல்களை ஆராய்ந்து

பார்த்தாலும் அவையனைத்தும் ஆத்ம சுத்தியில்லாமற் செய்யும் எவ்வித கருமங்களும் தத்தம் பயனைத் தராவென முறையிடுகின்றன. ஒரு பூஜ்யத்தின்முன் (0) யாதேனும் ஓரிலக்கமில்லாவிட்டால் அது எவ்வாறு கணக்கிட முடியாதோ அதுபோல ஓர் கருமம் அகத்தூய்மையான சித்தசுத்தியின்றிச் செயப்படுமாயின் அது சத்கருமமாகக் கணக்கிட முடியாது. ஆதலால், நாம் சிவானுபவத்தை அடைய வேண்டுமானால் நம்மால் செய்யப்படும் புறத் தூய்மையான ஆசார அனுட்டானங்களுடன் அகத்தூய்மையான சித்த சுத்தி முதலியனவும் அவசியம் வேண்டற்பாலனவென்று யாம் வற்புறுத்திக் கூறுதுவிடோம்.

இலக்ஷக் கணக்கான சீவராசிகளில் மானிடப் பிறவியே உயர்ந்தது. இம் மானிடப் பிறவியை அடைந்தவன் மேலும் உன்னத நிலையை அடைய வேண்டுமானால் சாமானிய விஷய இன்பங்களில் இறங்கிவிடாமல் சனாதன தருமங்களில் பக்தியுடையவனாதல் வேண்டும். சுதரும பக்தியுடையவனாதல் அன்றி வேறுமுயற்சி வேண்டுவதின்று. விஷய வாசனைகளில் இயற்கையான சாந்தத்துவ மில்லை. தருமாவலம்பத்திலன்றோ சாந்தத்துவம் வேரூன்றி நிற்கும். நாம் இவ்வுலகத்தின்கண் இலக்கண முறையில் ஆராய்ந்து பார்ப்போமாயின் அரசன்முதல் அடிமையீறாக ஒவ்வொருவரும் தத்தமக்கேற்ற இன்பப் பொருள்களுடன் கூடியிருந்தாலும் துன்பத்திலேயே ஆழ்ந்திருக்கக் காண்கின்றோம். இந்திரியங்களாகிய இன்பம் சத்தியம் ஆகாது. ஆனால் அவ்விந்திரியங்களே இன்பகரமானவை யென்று நாம் நாடிக்கொண்டிருக்கின்றோம். உண்மையின்பம் இந்திரியங்களிலின்று; அவற்றின் வேறாக இருக்கின்றது. "சுகமத்தியேத்திகம் எத்தபுத்தி மதீந்திரியம்" என்று பகவத்கீதையிலுங் கூறப்பட்டுள்ளது. சுகத்தின் கற்பனையால் விஷயாதிகளைத் தொடர்ந்து அதனையடையும்பொருட்டு எத்துணையளவு முயற்சித்தாலும் முடிவில் அச்சுகம் எங்குங் கிடைப்பதின்று. அச்சுகம் கையிலுள்ளதெனக் கருதியிருந்தாலும் நம்மினின்றும் அகன்றுவிடுகின்றது. இங்ஙனம் அநேக அனுபவங்கள் வருதலும் போதலுமாயிருக்கின்றன. நாம் அறிவில்லாது அச்சுகத்தை நாடித் தொடர்ந்துகொண் டிருக்கிறோம். ஒருவன் தனது வண்டியிற் பூட்டிய மாடுகள் விரைந்து செல்லவேண்டித்

தந்திரமாக அம்மாடுகளின் முன்னிலையில் ஒருகஜம் எட்டாத தூரத்தில் ஒருகோலின் நுனியில் சிறிது பசும்புல்லைக் கட்டிவைக்கிருன். மாடுகள் அப்பசும்புல்லைத் தின்னவேண்டி அதிவிரைவாக நடக்கின்றன. அம்மாடுகள் எவ்வளவு தூரம் விரைந்து சென்ருலும் அப்புல் முன்னிருந்த தூரத்திலேயே இருக்கின்றது. அவை அதனைத்தின்ன முடிகிறதில்லை. தாம் நகர அப்புல்லும் தம்மால் நகர்ந்துகொண்டே யிருக்கின்றதென்றும் உணர்ந்துகொள்ளுவதில்லை. அதைப்போலவே நாமும் பலபிறவிகளாக விஷய இன்பங்களிற் சிக்கி வருந்திக்கொண்டிருக்கிறேம். சுகமோ நமக்கு எட்டாத தூரத்திலேயே இருக்கின்றது. நாம் இன்பம் இன்பம் எனக்கருதிக் கலியாணஞ் செய்துகொண்டு சுகவாழ்வுவாழ எண்ணுகின்றேம். ஆனல் எண்ணுகின்றபடி அதில் அத்துணை இன்பம் உண்டாவதில்லை. ஒருவர் வலையில் மற்றொருவர் சிக்கிக்கொண்டு துன்புறும் இச்சுகமே பலபிறவிகளாக நம்மைத் தொடர்ந்து வருகின்றது. நாம் எப்பொழுதுந் துன்பம் இன்றி இன்பத்திலேயேயிருக்க எண்ணுகின்றேம். எண்ணுகிறபடி அதற்குரிய நெறியை மாத்திரம் நாடுவதில்லை. நாடினுலும் கடைபோக உறுதிபெற நிற்பதில்லை. நிற்போமாயினும் இடையில் நேரும் இடையூருல் தளர் வெய்துகின்றேம். கணத்திற்குக் கணம் நூறுகோடி மாயாசக்திகள் நம்மை யலைக்கின்றன. இவ்வகையில் ஞானக் கண்ணில்லாக் குருடராய்த் திரிகின்றேம். இங்ஙனமே இவ்வுலகியல் எண்ணிறந்த காலமாக நடந்துகொண் டிருக்கின்றது. மரணம் சமீபத்தில் இருக்கிறதென்று எவன் உணரவில்லையோ அவன் ஆசையினின்றும் விடுபடான். இதைப்பற்றி ஸ்ரீ வசவண்ணரும் "பொன் மாயை யென்பர் பொன் மாயை யல்ல, பெண் மாயை யென்பர் பெண் மாயை யல்ல, மண் மாயை யென்பர் மண் மாயை யல்ல, மனதின் நுனியி லிருக்கும் ஆசையே மாயை" என்றருளி யிருக்கின்றனர். இதையுணர்ந்தாவது ஆசையறுதல் வேண்டும். (தொடரும்).

தமிழ்நாட்டு நிகழ்ச்சிகள்.

விநாயக சதுர்த்தி விரதம்.

நிகழும் ஆவணிமீ கசஉ ஸ்ரீவிநாயக சதுர்த்தி விரததினத்தன்று திருநணா என்னும் புண்ணியத்தலமாகிய பவானியின்கண் வீரசைவ ஜங்கம பக்தர்களது பொது மடத்தில் காலையில் ஸ்ரீவிநாயகப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றது. கணேசப் பெருமானுடைய கருணையைப்பெற்று யாவரும் மகிழ்வெய்தினர். பிற்பகலில் திருவாளர் வி. வீரதாத்த பண்டாரம் அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் கூடிற்று. திருவாளர் அ. ஆறுமுக பண்டாரம் அவர்கள் வீரசைவ சங்கம பக்தி, சிவலிங்கதாரணம், விபூதி ருத்திராக்ஷதாரணம் முதலியவற்றின் பெருமையும், வீரசைவ மடாதிபதிகளின் சிறப்பையும் யாவரும் மகிழும்படி உபந்நியசித்தார்கள். பின்னரும் "வீரசைவம்" என்னும் மாதப்பத்திரிகையின் பெருமையினையும் அவசியத்தையும் யாவருக்கும் விளங்க எடுத்துக்கூறி வீரசைவ சங்கம பக்தர்களாகிய ஒவ்வொருவரும் அதனை வாங்கிப்படித்து அதன்படி நடக்கவேண்டுமெனவும், அவசியம் ஆதரிக்க வேண்டுமெனவும் எடுத்துக்கூற யாவரும் மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டனர். சபை இனிது நிறைவேறியது.

இங்ஙனம்,

சு. ப. பசவ பண்டாரம்,

சமகீகாள வர்த்தகம், பவானி.

சுகாதாரவாரக் கொண்டாட்டம்.

லால்குடி தாலூகா கானக்கிளியனூரின் கண் 16—8—30-ல் பெருவளப்பூர் பிரிவு நிலக்கண்காணிப்பாளர் (ரெவினியூ இன்ஸ்பெக்டர்) திருவாளர், G. R. கிருஷ்ணய்யர் அவர்கள் தலைமையில் சுகாதாரவாரக் கொண்டாட்டத்தின் 3-வது ஆண்டு விழா செவ்வனே நடைபெற்றது. உத்தியோகஸ்தர்களும் மாணவர்களுமாகிய பெருங்கூட்டத்துடன் நகரத்தார் ஊர்வலம் வந்து பொது மன்றத்திற் கூடினார்கள். போர்டு பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. P. கல்யாண வீரையர் அவர்கள் வரவேற்புப் பத்திரமும், கர்ணம் திரு. R. சுந்தரேசய்யர் அவர்கள் அறிக்கையும் வாசித்தார்கள். பெருவளப்பூர் டாக்டர் திரு. மதுரநாயகம் பிள்ளை L. M. P. அவர்கள் தொத்து வியாதியைப்பற்றியும், மெய்யம்பட்டி திரு. S. K. துரைசாமி ஐயர் அவர்கள் ஜலம் என்பதைப் பற்றியும், வேங்கடத்தானூர் திரு. V. சோமசுந்திரய்யர் அவர்கள் பெண் கல்வியைப் பற்றியும், பெருவளப்பூர் நிலக்கிழவர் திரு. பெ. கண்ணுசாமி ரெட்டியார் அவர்கள் செய்ந்நன்றியறிதலைப்பற்றியும், உள்ளூர் நிலக்கிழவர் திரு. நாராயணசுவாமி ரெட்டியார் அவர்கள் 'பெண்களின் உயர்வு' என்பதைப்பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். பாடசாலை மாணவர்கள் சுகாதாரப் பாடல் பாடிக் கோலாட்டம் அடித்தார்கள். மாணவர்கட்குப் பரிசுகள் அளிக்கப் பெற்றன. தலைவரவர்கள் சொற்பொழிவுகளின் கருத்துக்களை விளக்கி, சுகாதாரத்திற்கின்றியமையாதனவற்றையெடுத்துரைத்து, இக்கொண்டாட்டத்தை நடத்தக் காருணிய கவர்ன்மெண்டாரும், தாலூகா போர்டாரும் கொண்டுள்ள முயற்சியையும் எடுத்துரைத்து மகிழ்வித்தார்கள். 8 வயது மாணவரிருவர் ஆங்கிலத்தில் இராஜவாழ்த்துக் கூறினார்கள். முடிவில் தலைமையாசிரியர், தலைவர் முதலாயினோர்க்கு நன்றி கூறி மாலை சூட்டக் கொண்டாட்டம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. நீடூழி நின்று நிலவுக!

இங்ஙனம்,

கீழவட்டகைக் காரியதரிசி,

P. கல்யாண வீரையர்.

சங்கத்தின் வரவு.

பிரமோதூத ஆண்டு ஆவணித்திங்கள் ஆதனூரில் நடந்த புத்திரர் திரு. சோமசுந்தரய்யரவர்கள் மருமான் திரு. பொன்னுசாமி அய்யரவர்கள் சாந்தி முகூர்த்தத்தில் மகா சங்கத்திற்கு ஒதிக் கொடுத்தது ரூ. 1. மக்கட்பேறுடன் வளம்பெற்று நிலவுக. சுபம்.

சந்தா விவரம்.

ஆயுட் சந்தா	... ...	ரூ. 25–0–0
ஆண்டுச் சந்தா	... ...	,, 2–0–0
மாணவர்கட்கு ஆண்டுச் சந்தா	...	,, 1–8–0
தனிப்பிரதி	... ...	,, 0–3–0

விளம்பர விகிதம்.

பக்கம் 1-க்கு மாதம் 1-க்கு	... ...	ரூ. 5–0–0
,, ½-க்கு ,,	... ...	,, 3–0–0